RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 85 | ஏப்ரல்.3 2026 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# வெளிநாட்டு நிதி பங்களிப்பு திருத்த மசோதாவை மத்திய அரசு கைவிட மு.க. ஸ்டாலின் வலியுறுத்தல்

சென்னை: ஏப்.3-

கிறித்தவத் தொண்டு நிறுவனங்களையும், தேவாலயங்களையும், பிற மதச் சிறுபான்மைத் தொண்டு நிறுவனங்களையும் குறிவைக்கும் வெளிநாட்டு நிதி பங்களிப்பு ஒழுங்குமுறை திருத்த மசோதாவை மத்திய அரசு கைவிட வேண்டும் என்று மு.க. ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக தமிழக முதல்வரும் திமுக தலைவருமான மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், ‘‘வெளிநாட்டு நிதிப் பங்களிப்பு (ஒழுங்குமுறை) சட்டமுன்வரைவு, 2026 என்ற பெயரில் ஒன்றிய பா.ஜ.க. அரசால் முன்மொழியப்பட்டிருக்கும் திருத்தங்கள் முழுக்க முழுக்க கிறித்தவத் தொண்டு நிறுவனங்களையும், தேவாலயங்களையும், பிற மதச் சிறுபான்மைத் தொண்டு நிறுவனங்களையும், குறிவைத்துத் தொடுக்கப்படும் நேரடித் தாக்குதல் ஆகும்.



ஏற்கெனவே வக்பு வாரிய சட்டத்திருத்தம் மூலம் இஸ்லாமிய சொத்துகளைக் கபளீகரம் செய்ய முயன்றதையடுத்து, தற்போது மற்ற மதச்சிறுபான்மையின அமைப்புகள் வெளிநாடுகளில் இருந்து பெறும் நிதியை முடக்கும் முயற்சியில் ஒன்றிய பா.ஜ.க. அரசு இறங்கியுள்ளது.

எதிர்க்கட்சிகளின் போராட்டத்தாலும், கிறித்தவர்கள் அதிக அளவில் வாழும் கேரளத்தில் தேர்தல் நடைபெற இருப்பதாலும் இப்போதைக்குப் பின்வாங்குவது போல நடித்து, விரைவில் நாடாளுமன்றச் சிறப்புக் கூட்டத்தொடரைக் கூட்டி இந்த சட்டத்திருத்தத்தை நிறைவேற்ற பா.ஜ.க. அரசு திட்டமிடுவதாக அறிகிறேன்.

இந்த முயற்சிகளைக் கைவிட்டு, மாண்புமிகு பிரதமர் அவர்கள் இந்தத் தன்னிச்சையான, அநியாயச் சட்டத்திருத்தத்தை முற்றிலுமாகத் திரும்பப் பெறும் நடவடிக்கையை உடனடியாக எடுக்க வேண்டும் என வலியுறுத்துகிறேன்’’ என தெரிவித்துள்ளார்.



## சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியில் உதயநிதி ஸ்டாலின் வேட்புமனு தாக்கல்!

சென்னை: ஏப்.3-

சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியில் போட்டியிட துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தேர்தல் அதிகாரியிடம் வேட்புமனு தாக்கல் செய்தார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் ஏப்.23ம் தேதி ஒரே கட்டமாக நடைபெற உள்ளது. இந்நிலையில், தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் கடந்த 30ம் தேதி தொடங்கியது. வருகிற 6ம் தேதி வேட்புமனு தாக்கலுக்கு கடைசி நாளாகும். அன்று மதியம் 3 மணி வரை வேட்பு மனுக்கள் பெறப்படவிருக்கிறது. இதனிடையே திமுக, அதிமுக, தவெக மற்றும் நாதக ஆகிய கட்சி நிர்வாகிகள் தீவிரமாக களத்தில் செயலாற்றி வருகிறார்கள்.

இந்நிலையில். திமுக சார்பில் 2வது முறையாக சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியில் போட்டியிட துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தேர்தல் அதிகாரியிடம் இன்று (ஏப். 2) வேட்புமனு தாக்கல் செய்தார் . சேப்பாக்கத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் சுகந்தியிடம், அவர் வேட்புமனுவை தாக்கல் செய்தார்.


தமிழக சட்டப்பேரவை தொகுதிகளின் வரிசைப்பட்டியலில் 19 வதாக இடம்பெற்றுள்ள சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதி, சென்னையின் மிக முக்கியமான அடையாளங்களை உள்ளடக்கியது.

இந்த தேர்தலில் திமுக சார்பில் மீண்டும் உதயநிதி ஸ்டாலின் போட்டியிடுகிறார். அதிமுகவில் ஆதி ராஜாராம், நாதகவில் ஆயிஷா பேகம், தவெகவில் டி.செல்வம் ஆகியோர் களம் இறங்கியுள்ளார்கள். இந்த ஆண்டு பிப்ரவரி 23ம் தேதி வெளியிடப்பட்ட இறுதி வாக்காளர் பட்டியலின்படி, இத்தொகுதியில் 79 ஆயிரத்து 412 ஆண்கள், 84 ஆயிரத்து 396 பெண்கள், 58 மூன்றாம் பாலினத்தவர்கள் என மொத்தம் 1 லட்சத்து 63,866 வாக்காளர்கள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## எல்.முருகன் மீதான தேர்தல் விதிமீறல் வழக்குகள் ரத்து ஐகோர்ட் உத்தரவு

சென்னை: ஏப்.3-

மத்திய அமைச்சர் எல்.முருகன் மீதான இரண்டு தேர்தல் விதிமீறல் வழக்குகளை ரத்து செய்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



கடந்த 2024ம் ஆண்டு நடந்த மக்களவை தேர்தலில், நீலகிரி தொகுதியில் பாரதிய ஜனதா கட்சி சார்பில் எல்.முருகன் போட்டியிட்டார். அப்போது, தேனாடுகம்பை கடநாடு கிராமத்தில் அனுமதியின்றி பொதுமக்கள் மத்தியில் கூட்டம் நடத்தியதாக வழக்குப்பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கு உதகமண்டலம் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது.

இதேபோல, தொகுதிக்கு உட்பட்ட சத்தியமங்கலத்தில் உள்ள பள்ளியில் விதிகளை மீறி தேர்தல் கலந்தாய்வு கூட்டம் நடத்தியதாக, எல்.முருகனுக்கு எதிராக வழக்குப்பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கு, ஈரோடு மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது.

அரசியல் உள்நோக்கம் காரணமாக தொடரப்பட்ட இந்த இரு வழக்குகளும் தொடரப்பட்டுள்ளதால், அவற்றை ரத்து செய்ய வேண்டும் என அமைச்சர் எல்.முருகன் தரப்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த மனுக்கள், நீதிபதி ஜெகதீஷ் சந்திரா முன் விசாரணைக்கு வந்தபோது, குறித்த கால அவகாசத்துக்குள் வழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யவில்லை என்பதால், இரு வழக்குகளையும் ரத்து செய்ய வேண்டும் என அமைச்சர் முருகன் தரப்பில் வாதிடப்பட்டது. இந்த வாதத்தை ஏற்றுக் கொண்ட நீதிபதி, அமைச்சர் எல்.முருகன் மீதான இரண்டு தேர்தல் விதிமீறல் வழக்குகளையும் ரத்து செய்து உத்தரவிட்டார்.

## ‘‘திமுக வேறு; பாஜக வேறு அல்ல’’ திருச்சியில் விஜய் பிரச்சாரம்

திருச்சி: ஏப்.3-

‘‘கரூர் நிகழ்ச்சி எப்படி ஒரு சூழ்ச்சியோ, அதேபோல், ஜனநாயகன் பட வெளியிட்டுக்கும் கூட்டு சதி நடைபெறுகிறது. திமுக வேறு, பாஜக வேறு அல்ல இரண்டுமே ஒன்றுதான்’’ என்று தவெக தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

பெரம்பூர் தொகுதியை தொடர்ந்து திருச்சி கிழக்கு தொகுதியில் போட்டியிட விஜய் இன்று விமானம் மூலம் சென்னையில் இருந்து திருச்சி விமான நிலையம் சென்றார். பின்னர் தொண்டர்கள் படை சூழ பிரச்சார வாகனத்தில் மாவட்ட தேர்தல் அதிகாரியை சந்தித்து தனது வேட்பு மனுவை தாக்கல் செய்த விஜய், அருகில் இருந்த எம்ஜிஆர் சிலைக்கு மரியாதை செலுத்தினார்.

பின்னர் திறந்தவெளி பிரச்சார வாகனத்தில் பேசிய விஜய், ‘‘காஸ் பிரச்சினை எப்படி உள்ளது? காஸ் பிரச்சினையால் சிறிய அளவிலான டீ கடைகள் முதல் உணவகங்கள் வரை பாதிப்பை சந்தித்துள்ளன.

இப்படி ஒரு போர் மூலம் இப்படி ஒரு சூழல் ஏற்படும் என்று எவரும் எதிர்பார்க்கவில்லை (ஈரான் அமெரிக்க போர்). இவருக்கு ஒரு பிரச்சனை என்றால் விமானத்தில் டெல்லி சென்று வரும் முதல்வர், காஸ் தட்டுப்பாட்டை போக்க டெல்லி போய் வந்து இருக்கலாமே? இவர்கள் எப்போது சொன்னதை செய்துள்ளனர், அனைத்தும் வெற்று அறிக்கை மட்டுமே.



இவர்கள் 2021ம் கொடுத்த தேர்தல் வாக்குறுதிகளையே முழுமையாக நிறைவேற்றவில்லை. காஸ் சிலிண்டருக்கு மானியம், கரும்புக்கு ஆதார விலை, ரேஷனில் சர்க்கரை, உளுந்து கூடுதலாக வழங்கல் இப்படி திமுகவின் பொய் வாக்குறுதிகளை அடுக்கிக்கொண்டே போகலாம். எவ்வளவு முறை சொல்வது, இருப்பதிலேயே மிக பெரிய பொய் வாக்குறுதி நீட் தேர்வு ரத்து.

இவர்கள் ஆட்சியில் அரசு பள்ளிகளில் அடிப்படை வசதிகள் கூட இருப்பதில்லை. ஏன்.. ஒரு கிராமத்தில் அடிப்படை வசதிகள் இல்லாமல் இயற்கை உபாதையை கழிக்காக வெளியே சென்ற பிளஸ் 2 மாணவி கொலை செய்யப்பட்ட அவல நிலை தமிழ்நாட்டில் நிலவுகிறது.

இதே திருச்சியை சேர்ந்த அமைச்சர், அரசு வேலை வாங்கி தருவதாக ரூ.12,000 கோடி ஊழல் செய்துள்ளார். கரூர் நிகழ்ச்சி எப்படி ஒரு சூழ்ச்சியோ, அதேபோல், ஜனநாயகன் பட வெளியிட்டுக்கும் கூட்டு சதி நடைபெறுகிறது. திமுக வேறு, பாஜக வேறு அல்ல இரண்டுமே ஒன்றுதான்.

தொடர்ந்து தவெக தேர்தல் வாக்குறுதி குறித்து பட்டியலிட்ட விஜய், ஏப்ரல் 23ம் தேதி உங்களுக்கான தேர்தல், வசதியான வாழ்க்கையை உதரிவிட்டு உங்களுக்காக வந்துள்ள எனக்கு ஒரு வாய்ப்பு கொடுங்க. அதோடு, திருச்சி மாவட்டத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ள வேட்பாளர்கள் அனைவரையும் வெற்றி பெறச் செய்யுங்கள். தவெக வேட்பாளர்கள் வேறு; நான் வேறு அல்ல’’ என்று தெரிவித்தார்.

## ‘‘கேரள மக்கள் பாஜகவை உற்சாகமாக ஆதரிக்கின்றனர்’’ பிரதமர் மோடி கருத்து

புதுடெல்லி: ஏப்.3

கேரள மக்கள் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியை வலுவாக ஆதரித்து வருவதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். மேலும், எல்டிஎஃப் மற்றும் யுடிஎஃப் ஆகிய இரு கூட்டணிகளின் வெற்று வாக்குறுதிகளை வாக்காளர்கள் புரிந்துகொண்டுவிட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கேரள சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி இன்று மாலை நடைபெறவுள்ள "மேரா பூத் சப்சே மஸ்பூத் சம்வாத் ஸ்ரீ கேரளம்" நிகழ்ச்சியின் மூலம், கட்சித் தொண்டர்கள் மற்றும் பொதுமக்களுடன் பிரதமர் மோடி கலந்துரையாட உள்ளார்.

இந்த சூழலில் பிரதமர் மோடி எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில், "கேரளம் முழுவதும் உள்ள மக்கள் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியை உற்சாகமாக ஆதரித்து வருகின்றனர். எல்டிஎஃப் மற்றும் யுடிஎஃப் ஆகிய இரு கூட்டணிகளின் வெற்று வாக்குறுதிகளை அவர்கள் நன்கு புரிந்துகொண்டுவிட்டனர்.



இன்று மாலை 4:30 மணிக்கு நடைபெறவுள்ள 'மேரா பூத் சப்சே மஸ்பூத் சம்வாத் ஸ்ரீ கேரளம்' நிகழ்ச்சியை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

2026ஆம் ஆண்டிற்கான கேரள சட்டப்பேரவைத் தேர்தல்கள் ஏப்ரல் 9ஆம் தேதி நடைபெறவுள்ளன. வாக்கு எண்ணிக்கை மே 4 ஆம் தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. கேரளாவில் எல்டிஎஃப், யுடிஎஃப் மற்றும் என்டிஏ என மும்முனைப் போட்டி நிலவுகிறது.

மார்ச் 31 அன்று, கேரள பாரதிய ஜனதா கட்சி தனது தேர்தல் அறிக்கையை வெளியிட்டது. தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்தால், கேரளத்தை உலகின் முக்கியமான சுற்றுலாத் தலமாக உருவாக்குவதாகவும், திருவனந்தபுரத்தை தகவல் தொழில்நுட்பத் தலைநகராகவும், கொச்சியை இந்தியாவின் கப்பல் கட்டுமான மையமாகவும், கோழிக்கோட்டை சுகாதாரம் மற்றும் மருத்துவ தலைநகராகவும், திருச்சூரை கலாச்சாரச் சுற்றுலாத் தலைநகராகவும், கடல்சார் ஏற்றுமதிக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் கொல்லத்தை சர்வதேச அளவில் போட்டியிடக்கூடிய 'நீலப் பொருளாதார' மையமாகவும், கண்ணூரைப் பாதுகாப்புத் துறை சார்ந்த புத்தாக்க மையமாகவும் மேம்படுத்துவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெண்கள் 'பக்ஷ்ய ஆரோக்கிய சுரக்ஷா அட்டை' மூலம், மருந்துகள் மற்றும் மளிகைப் பொருட்களை வாங்குவதற்காக மாதந்தோறும் ரூ. 2,500 தொகையை பெறலாம். மேலும், கேரளாவில் எய்ம்ஸ் மருத்துவமனை ஒன்றை நிறுவுவதாகவும், திருவனந்தபுரத்தை கண்ணூருடன் இணைக்கும் அதிவேக ரயில் பாதையை மேம்படுத்துவதாகவும் தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏழைக் குடும்பங்களுக்கு ஆண்டுக்கு இரண்டு இலவச எல்பிஜி சிலிண்டர்கள் வழங்கப்படும். ஒவ்வொரு வீட்டிற்கும் மாதந்தோறும் 20,000 லிட்டர் இலவச தண்ணீர் வழங்கப்படும் எனவும் தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**present sale for all over Tamil Nadu**

**தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது**




# மானாமதுரை - முத்து ஆமினா முஸ்லிம் பள்ளியில் ஆண்டு விழா கோலாகலம்

மானாமதுரை ஏப்.03-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை கன்னார் தெருவில் செயல்பட்டு வரும் முத்து ஆமினா முஸ்லிம் நர்சரி மற்றும் பிரைமரி பள்ளியில் நடப்பு கல்வியாண்டிற்கான ஆண்டு விழா மற்றும் பரிசளிப்பு விழா சிறப்பாக நடைபெற்றது. இந்த விழாவிற்கு பள்ளி தாளாளர் இப்ராஹிம் கனி தலைமை தாங்கினார். நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக இளையான்குடி டாக்டர் ஜாகிர் உசேன் கல்லூரியின் துணை முதல்வர் மற்றும் இணைப் பேராசிரியரான சுல்தான் செய்யது இப்ராஹிம் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கினார்.

நிகழ்ச்சியின் தொடக்கமாக தமிழ் தாய் வாழ்த்து பாடப்பட்டு, தொடர்ந்து மாணவர்களின் வரவேற்புஉரை இடம்பெற்றது. பின்னர் மாணவர்கள் பல்வேறு கலாச்சார நிகழ்ச்சிகளில் பங்கேற்று, தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர். குறிப்பாக நடனம், பாடல், நாடகம் போன்ற நிகழ்ச்சிகள் பார்வையாளர்களை கவர்ந்தன.

அதனைத் தொடர்ந்து கல்வி, விளையாட்டு மற்றும் பல்துறை சாதனைகளில் சிறந்து விளங்கிய மாணவர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. சிறப்பு விருந்தினர் தனது உரையில், மாணவர்கள் கல்வியுடன் ஒழுக்கத்தையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றும், எதிர்காலத்தில் உயர்ந்த நிலையை அடைய தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டும் என்றும் அறிவுரை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் பெருமளவில் கலந்து கொண்டு மாணவர்களை உற்சாகப்படுத்தினர்.




# செங்குன்றம் வடக்கு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் முப்பெரும் விழா

மாதவரம், ஏப்.3-

மாதவரம் தொகுதி செங்குன்றம் வடக்கு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி முப்பெரும் விழா தலைமை ஆசிரியர் அஞ்சுகம் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. இடைநிலை ஆசிரியர் தாட்சாயிணி ஆண்டறிக்கை வாசித்தார். புழல் ஒன்றிய வட்டார கல்வி அலுவலர் ராஜேந்திரன், புழல் ஒன்றிய வட்டார வள மையம் ஆசிரியர் பயிற்றுனர் கவிதா ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவிற்கு சிறப்பு அழைப்பாளர்களாக செங்குன்றம் (நாரவாரிக்குப்பம்) பேரூராட்சி பெருந்தலைவர் கு.தமிழரசிகுமார், நெசவாளர் அணி மாவட்ட அமைப்பாளர் ஆர்.டி. குமார், மருத்துவர் கோபால், செங்கன்றம் பேரூர் ஒன்றிய துணைச் செயலாளர் ஆர்.சீனிவாசன், கவிஞர் திருநாவுக்கரசு, ஆகியோர் கலந்துகொண்டு பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கும், கலைநிகழ்ச்சிகளில் கலந்துகொண்டவர்களுக்கும் பரிசு பொருட்களை வழங்கி பாராட்டி வாழ்த்தினர். இதில் பள்ளி சகஆசிரியர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட பள்ளி அலுவலகப் பணியாளர்கள் கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தனர். முடிவில் முனீர்உன்னிசா அனைவருக்கும் நன்றி கூறினார்.

# மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கு ஆதரவு

## ஐந்திணை மக்கள் கட்சி அறிக்கை

தென்காசி ஏப்.03-

தமிழ் நாட்டில் வரும் 2026 தமிழக சட்டமன்றத் தேர்தலில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கு ஆதரவு அளிப்பதாக ஐந்திணை மக்கள் கட்சி அறிவித்துள்ளது. இது தொடர்பாக அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் வை. தேவதாசு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழகத்தில் ஜனநாயகத்தைக் காக்க வேண்டிய இக்கட்டான சூழலில் இந்த தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் மத்தியில் ஆட்சி அதிகாரத்தில் இருந்த பாரதிய ஜனதா கட்சி, தமிழர்களுக்கு எதிராகச் செய்த துரோகங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. தமிழ் மொழியை அழித்து, இந்தி மற்றும் சமஸ்கிருதத்தைத் திணிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

பொருளாதாரப் புறக்கணிப்பு மற்றும் சுங்கச்சாவடி அரசியல்:

தமிழகத்திற்கான நிதி ஒதுக்கீட்டில் மத்திய அரசு தொடர்ந்து துரோகம் இழைத்து வருகிறது. குறிப்பாக, மகாராஷ்டிராவில் 15,437 கி.மீ தேசிய நெடுஞ் சாலைகளுக்கு வெறும் 44 சுங்கச்சாவடிகள் மட்டுமே உள்ளன. ஆனால், தமிழகத்தில் 5,381 கி.மீ சாலைகளுக்கு இந்திய துணைக்கண்டத்திலேயே மிக அதிகமாக 78 சுங்கச்சாவடிகள் அமைக்கப்பட்டு மக்கள் சுரண்டப்படுகிறார்கள்.

அரசியல் நிலைப்பாடு:

சினிமா கவர்ச்சியை மட்டுமே முதலீடாக வைத்து, எந்தவித அரசியல் புரிதலும் இன்றி களமிறங்கியுள்ள நடிகர்களுக்கும், அண்ணல் அம்பேத்கர் வழங்கிய அரசியல் சாசனத்திற்கு அச்சுறுத்தலாக விளங்கும் பாசிச சக்திகளுக்கும் இந்த தேர்தலில் மக்கள் தகுந்த பாடம் புகட்ட வேண்டும்.

சாதி ஒழிப்புக்களத்தில் போராடிய தியாகி இமானுவேல் சேகரனாருக்கு மணிமண்டபத்துடன் கூடிய முழு உருவச்சிலை நிறுவியதோடு, அவரது பிறந்தநாளை அரசு விழாவாக அறிவித்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க செயலை ஐந்திணை மக்கள் கட்சி மனதார வரவேற்கிறது.

எனவே, சிறுபான்மையின மக்களின் நலனைப் பேணவும், தமிழர்களின் அரசியல் உரிமைகளைக் காக்கவும், பாசிச பாஜக மற்றும் அதன் கூட்டணி கட்சிகளைப் புறக்கணித்து, திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கு பொதுமக்கள் வாக்களிக்க வேண்டும் என அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# "திமுக தலைமையிலான கூட்டணி 100% வெற்றி பெறும்" சிவகங்கை மாவட்ட செயலாளர் பெரியகருப்பன் உறுதி

சிவகங்கை, ஏப்.3-

தமிழகத்தில் நடைபெறவிருக்கும் 17வது சட்டமன்றத் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியானதைத் தொடர்ந்து, அரசியல் களம் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது. நேற்று முதல் வேட்புமனுத் தாக்கல் தொடங்கியுள்ள நிலையில், திமுக மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் தேர்தல் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

இது தொடர்பாக நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினரும், சிவகங்கை திமுக மாவட்ட செயலாளருமான பெரியகருப்பன் முன்னிலையில் நிர்வாகிகள் பேசியதாவது:



வெற்றிக் கூட்டணி

தமிழக முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான திமுக கூட்டணி, கடந்த பல தேர்தல்களாகத் தொடர்ந்து வெற்றிகளைப் பெற்று வருகிறது. குறிப்பாக 2024 நாடாளுமன்றத் தேர்தலில் புதுச்சேரி உள்ளிட்ட 40 தொகுதிகளிலும் 100 சதவீத வெற்றியைப் பதிவு செய்து சாதனை படைத்துள்ளது. அதே போன்றதொரு மகத்தான வெற்றியை இந்தச் சட்டமன்றத் தேர்தலிலும் மக்கள் வழங்குவார்கள்.

நெருக்கமான உறவு

முன்னாள் முதல்வர் கருணாநிதி எவ்வாறாகத் தோழமைக் கட்சிகளை மதித்து, அவர்களுக்கு உரிய அங்கீகாரத்தையும் ஆதரவையும் வழங்கினாரோ, அதே வழியில் முதல்வர் ஸ்டாலின் அவர்களும் கூட்டணிக் கட்சிகளை அரவணைத்துச் செல்கிறார். தமிழக அரசியல் வரலாற்றிலேயே இவ்வளவு நீண்ட காலம் ஒரு கூட்டணி ஒற்றுமையாக நீடிப்பது இதுவே முதல்முறை.

முக்கிய நிர்வாகிகள் பங்கேற்பு இந்தச் சந்திப்பின் போது முன்னாள் அமைச்சரும் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினருமான தமிழரசி ரவிக்குமார், முக்குலத்தோர் புலிப்படை அமைப்பின் தலைவரும், 2026ஆம் ஆண்டிற்கான சிவகங்கை சட்டமன்ற தொகுதி வேட்பாளருமான கருணாஸ் ஆகியோர் உடனிருந்தனர். கூட்டணிக் கட்சிகளின் இந்த ஒற்றுமை தேர்தல் களத்தில் பெரும் பலத்தை அளிப்பதாக நிர்வாகிகள் தெரிவித்தனர்.

ஸ்டாலின் 2.0 ஆட்சி

தமிழக மக்கள் முதல்வர் ஸ்டாலின் மீதுமிகுந்த நம்பிக்கையும் ஆர்வமும் கொண்டுள்ளனர். ஏழாவது முறையாக திமுக ஆட்சியையும், இரண்டாவது முறையாக ஸ்டாலின் தலைமையிலான 'ஸ்டாலின் 2.0' அரசையும் மக்கள் அரியணையில் ஏற்றுவார்கள் என்பதில் எந்த ஐயமும் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

வேட்புமனுத் தாக்கல் செய்ய ஏப்ரல் 6ம் தேதி இறுதி நாள் என்பதும், ஏப்ரல் 23ம் தேதி வாக்குப்பதிவு நடைபெற்று, மே 4ம் தேதி தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளதும் குறிப்பிடத்தக்கது.



# குன்னூர் தொகுதி திமுக தோழமை கட்சி நிர்வாகிகள் கூட்டம்

நீலகிரி, ஏப்.3-

நீலகிரி மாவட்டம், குன்னூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட திமுக தோழமை கட்சி நிர்வாகிகள் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் குன்னூர் சட்டமன்ற தொகுதி மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வேட்பாளர் நீலகிரி மாவட்ட திமுக பொறுப்பாளர் கே.எம். ராஜூ தோழமை கட்சி நிர்வாகிகளை கவுரவித்து ஆதரவு கோரினார்.

உடன் கழக தேர்தல் பணி செயலாளர் கா.ராமசந்திரன் குன்னூர் தொகுதி பார்வையாளர் கோவை திராவிடமணி மற்றும் நகர ஒன்றிய பேரூர் செயலாளர்கள், தோழமை கட்சிகளின் மாவட்ட நிர்வாகிகள், கலந்து கொண்டனர்



# சோழவரம் தெற்கு ஒன்றியத்தில் திமுக வேட்பாளர் எஸ்.சுதர்சனம் தீவிர வாக்கு சேகரிப்பு

மாதவரம், ஏப்.3-

திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் சட்டமன்ற தொகுதி மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி திமுக வேட்பாளர் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.சுதர்சனம் சோழவரம் தெற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட நெற்குன்றம், ஒரக்காடு, சோத்துபெரும்பேடு, காரனோடை, ஆத்தூர், புதிய, பழைய எருமைவெட்டிபாளையம் ஆகிய ஊராட்சிகளில் சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளர் மீ.வே.கருணாகரன் தலைமையில் திறந்த வேனில் வாக்காளர்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தனர். பின்னர் காரனோடை ஊராட்சியில் தேமுதிக மாநில கலை இலக்கிய துணை செயலாளர் விஜய்கண்ணன், ஒன்றிய கலை இலக்கிய பகுத்தறிவு திமுக பேரவை அமைப்பாளர் டி.எம்.கிருஷ்ணன், ஒரக்காடு ஊராட்சி கிருதுலாபுரத்தில் சென்னை வடகிழக்கு மாவட்ட மகளிரணி துணை அமைப்பாளரும் முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் சரஸ்வதி செல்வம், ஆத்தூர் ஊராட்சியில் விளையாட்டு மேம்பாட்டு அணி ஒன்றிய அமைப்பாளர் பத்மநாபன், புதிய எருவெட்டிபாளையம் ஊராட்சியில் கிளை செயலாளர் வெங்கடேசன், தேவநேரி கிராமத்தில் முன்னாள் திமுக கவுன்சிலர் தீபாநாகராஜ், பழைய எருமைவெட்டிபாளையம் ஊராட்சியில் எடப்பாளையம் 5வது கிளை செயலாளரும் சோழவரம் தெற்கு ஒன்றிய வர்த்தக அணி துணை அமைப்பாளர் ராஜா உள்ளிட்ட மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் நிர்வாகிகள், பொறுப்பாளர்கள் மற்றும் வாக்காளர்கள் திமுக வேட்பாளர் எஸ்.சுதர்சனத்திற்கு உற்சாகமாக வரவேற்பு அளித்தனர்.

# மானாமதுரை சட்டமன்ற தொகுதி மாவட்டப் பொருளாளராக மூ.ஆதிவளவன் நியமனம்

## கட்சித் தலைமைக்கு நன்றி தெரிவிப்பு

மானாமதுரை ஏப்.03-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சட்டமன்ற தொகுதி மாவட்டப் பொருளாளராக மூ.அர்ஜீன் (எ) ஆதிவளவன் அதிகாரப்பூர்வமாக நியமிக்கப்பட்டுள்ளார்.



தன்னை இந்த முக்கியப் பொறுப்பில் நியமித்த கட்சியின் தலைவர், எழுச்சித்தமிழர் தொல்.திருமாவளவன் M.P அவர்களுக்கும், தனக்கு வாய்ப்பளித்த மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் வே.பாளையா அவர்களுக்கும் தனது நெஞ்சார்ந்த நன்றியினை ஆதிவளவன் தெரிவித்துள்ளார். மேலும், இந்தப் பொறுப்பிற்கு பரிந்துரை செய்த மண்டலச் செயலாளர் பெரியசாமி, மண்டலத் துணைச் செயலாளர் முத்துராசு மற்றும் சங்கு.உதயகுமார் ஆகியோருக்கும் அவர் மனமார்ந்த நன்றியை வெளிப்படுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில், கட்சியின் வளர்ச்சிக்கும், கொள்கைகளுக்கும் வலுசேர்க்கும் வகையில் என்றும் தலைவருக்கும், தலைமைக்கும் கட்டுப்பட்டு அர்ப்பணிப்புடன் பணியாற்றுவேன் என உறுதிபடத் தெரிவித்துள்ளார்.


# நீலகிரி மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறையின் அதிநவீன மின்னணு வீடியோ விளம்பர வாகனத்தின் மூலம் தேர்தல் விழிப்புணர்வு

## மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் பார்வையிட்டு கொடியசைத்து தொடங்கி வைத்தார்

நீலகிரி, ஏப்.3-

நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 ஐ முன்னிட்டு, இளம் வாக்காளர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட அனைத்து வாக்காளர்களிடம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் அதிநவீன மின்னணு வீடியோ விளம்பர வாகனத்தின் மூலம் தேர்தல் விழிப்புணர்வு குறித்து குறும்படங்கள் திரையிடப்பட்டதை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேரில் பார்வையிட்டு,






விழிப்புணர்வு பணிகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தலில் வாக்காளர்கள் நியாயமாகவும், நேர்மையாகவும் எந்தவித எதிர்பார்ப்புகளும் இன்றி வாக்களிக்க வேண்டும் என்பதற்காகவும், 100 சதவீதம் வாக்குபதிவினை வலியுறுத்தி மாவட்டம் முழுவதும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதன் ஒரு பகுதியாக தேர்தல் ஆணையத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள பல்வேறு விழிப்புணர்வு குறும்படங்களை இன்று செய்தி மக்கள் தொடர்புத்துறையின் அதிநவீன மின்னணு வீடியோ விளம்பர வாகனத்தின் மூலம் திரையிடப்பட்டு, விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதை, மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு, விழிப்புணர்வு பணிகளை தொடங்கி வைத்தார்.

கொடியசைத்து துவக்கி வைத்த, அதிநவீன மின்னணு வீடியோ விளம்பர வாகனமானது, நீலகிரி மாவட்டத்திலுள்ள, நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி ஆகிய இடங்களிலுள்ள வாக்காளர்களிடையே வாக்களிப்பதன் அவசியம் குறித்து, விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. மேலும் வாக்குப்பதிவு நாளான ஏப்ரல் 23 அன்று வாக்காளர்கள் அனைவரும் தவறாமல் வாக்களிக்க வேண்டுமெனவும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

இந்நிகழ்வில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் நிஷா, மாவட்ட வருவாய் அலுவலர் (ஜென்மம் நிலங்கள்) வாசுகி மற்றும் வாக்காளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# இளையான்குடியில் பல ஆயிரம் லிட்டர் காவிரி கூட்டு குடிநீர் வீணாகிறது

## பேரூராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்க கோரிக்கை



இளையான்குடி ஏப்.03-

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி பரமக்குடி சாலையில் அமைந்துள்ள பேரூராட்சி தலைவர் வீட்டின் எதிர்புறம் உள்ள கண்மாய்க்கரை பகுதியில், கடந்த இரண்டு முதல் மூன்று மாதங்களாக காவிரி கூட்டு குடிநீர் குழாயில் பெரும் உடைப்பு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக தினமும் பல ஆயிரம் லிட்டர் குடிநீர் வீணாகச் சாலையில் ஓடி, கண்மாய் மடை வழியாகச் சென்று கொண்டிருக்கிறது.

தற்போது கோடை காலம் தொடங்கி, பல்வேறு பகுதிகளில் குடிநீர் பற்றாக்குறை நிலவி வரும் சூழலில், இவ்வளவு பெரிய அளவில் குடிநீர் வீணாவது பொதுமக்கள் மத்தியில் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. இந்த உடைப்பைச் சரிசெய்யக் கோரி பலமுறை வலியுறுத்தியும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனத் தெரிகிறது.இது குறித்து இளையான்குடி காங்கிரஸ் சிறுபான்மை பிரிவு தலைவர் மற்றும் சமூக நல ஆர்வலர் அம்பலம் ராவுத்தர் நெய்னார் வெளியிட்டுள்ள கோரிக்கையில்:

"கடந்த சில மாதங்களாகக் குடிநீர் குழாய் உடைந்து தண்ணீர் வீணாக கண்மாய்க்குள் சென்று கொண்டிருக்கிறது. வெயில் காலத்தின் தீவிரத்தை உணர்ந்து, பொதுமக்களின் நலன் கருதி இளையான்குடி பேரூராட்சி செயல் அலுவலர் இந்த விவகாரத்தில் உடனடியாகத் தலையிட வேண்டும். பொதுமக்களின் தாகம் தீர்க்க வேண்டிய குடிநீர் வீணாவதைத் தடுக்க போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து உடைப்பைச் சரிசெய்ய வேண்டும்," எனத் தெரிவித்துள்ளார்.பொதுமக்கள் மற்றும் காங்கிரஸ் கட்சி சார்பாக விடுக்கப்பட்டுள்ள இந்த கோரிக்கை குறித்து பேரூராட்சி நிர்வாகம் விரைந்து நடவடிக்கை எடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# தேர்தல் களம்: மானாமதுரையில் கனிமொழி எம்பி அதிரடிப் பரப்புரை தமிழரசி ரவிக்குமாருக்கு ஆதரவு திரட்டல்!



மானாமதுரை ஏப்.03-

தமிழகத்தில் தேர்தல் களம் சூடுபிடித்துள்ள நிலையில், திமுக துணைப் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி, தனது தேர்தல் பிரசாரத்தை நேற்று சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் இருந்து அதிகாரப்பூர்வமாகத் தொடங்கினார்.

வேட்பாளர் அறிமுகம் மற்றும் ஆதரவு

மானாமதுரை சட்டமன்றத் தொகுதியின் தற்போதைய உறுப்பினரும், வரும் 2026 சட்டமன்றத் தேர்தலின் வேட்பாளருமான தமிழரசி ரவிக்குமாரை ஆதரித்து கனிமொழி எம்பி தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். திறந்த வெளி வாகனத்தில் நின்றபடி மக்களிடையே உரையாற்றிய அவர், தமிழரசி ரவிக்குமாரின் தொகுதிப் பணிகளை வெகுவாகப் பாராட்டிப் பேசினார்.

திராவிட மாடல் அரசின் சாதனைகள்

தனது உரையில் கடந்த ஐந்து ஆண்டுகளில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசு செய்த சாதனைகளை கனிமொழி எம்பி பட்டியலிட்டார். குறிப்பாக, மானாமதுரை மற்றும் அதன் சுற்றுவட்டாரக் கிராமங்களில் செயல்படுத்தப்பட்ட முக்கியத் திட்டங்களை அவர் சுட்டிக்காட்டினார்:

* கண்மாய்கள் சீரமைப்பு: சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வட்டம், கட்டிகுளம், மிளகானூர் உள்ளிட்ட பகுதிகளில் ரூ. 60 லட்சம் மதிப்பீட்டில் கண்மாய்கள் சீரமைக்கப்பட்டன.

* வைகை ஆற்றில் அணைக்கட்டு: கீழப்பசலை மற்றும் இதர கண்மாய்களுக்குத் தண்ணீர் வழங்கும் வகையில் வைகை ஆற்றின் குறுக்கே ரூ. 16.86 கோடி செலவில் அணைக்கட்டு கட்டித் தரப்பட்டுள்ளது.

* நீர்ப்பாசனத் திட்டங்கள்: மானாமதுரை நாட்டார் கால்வாய் திட்டத்திற்கு ரூ. 10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

* புதிய உட்கட்டமைப்பு: ரூ. 12.38 கோடி மதிப்பீட்டில் மானாமதுரை ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டிடம் மற்றும் இருசக்கர வாகன நிறுத்துமிட வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

* கல்வி மற்றும் வேலைவாய்ப்பு: மானாமதுரையில் ரூ. 8 கோடி மதிப்பீட்டில் புதிய அரசு தொழிற் பயிற்சி மையம் (ITI) மற்றும் அரசு கலைக் கல்லூரி கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

மகளிர் நலன் மற்றும் நிதி உதவி

பெண்களுக்கான கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் குறித்துப் பேசிய அவர், தேர்தல் நேரத்தில் பிஜேபி அரசு இந்த நிதியைத் தடுக்க முயல்வதாகக் குற்றம் சாட்டினார். இருப்பினும், கோடைக்கால நிவாரணமாக கூடுதலாக ரூ. 2000 சேர்த்து மொத்தம் ரூ. 5000 வரை பெண்களின் வங்கிச் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்பட்டுள்ளதை அவர் நினைவு கூர்ந்தார்.

எதிர்க்கட்சிகளுக்கு சவால்

தமிழகத்தில் பாஜக தலைமையிலான கூட்டணிக்கு எதிராக ஒரு தார்மீகப் போர் நடப்பதாகக் குறிப்பிட்ட கனிமொழி எம்பி, "இது கீழடிக்கும் நாக்பூருக்கும் இடையிலான போர்" என்று வர்ணித்தார். தமிழகத்தின் உரிமைக்காகவும், திராவிட இயக்கத்தின் வெற்றிக்காகவும் மக்கள் திமுக கூட்டணிக்கு வாக்களிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

இந்த பரப்புரை கூட்டத்தில் முன்னாள் அமைச்சர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் திரளாகக் கலந்து கொண்டனர். கனிமொழியின் வருகையையொட்டி மானாமதுரை நகரம் முழுவதும் திமுக கொடிகளாலும், தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது.



# சுற்றுச்சூழல் மன்றம் சார்பாக ரெஜினா சிறார் திரைப்படம்

காளையார்கோவில் ஏப்.03-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்தில் உள்ள கீழக்கோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் சுற்றுச்சூழல் மன்றம் சார்பாக ரெஜினா என்ற சிறார் திரைப்படம் திரையிடப்பட்டது. மாணவ மாணவிகள் திரைப்படத்தை ஆர்வமுடன் பார்த்து ரசித்தனர். சுற்றுச்சூழல் மன்ற ஒருங்கிணைப்பாளர் ஆரோக்கியசாமி தலைமை வகித்தார். கணிதப் பட்டதாரி ஆசிரியை மீனாட்சி வரவேற்புரை ஆற்றினார். மாணவ மாணவிகள் திரைப்படம் குறித்து திரை விமர்சனங்களை முன் வைத்தனர். பல்வேறு திறமைகளுக்கு சொந்தக்காரியான ரெஜினா விடுமுறையில் தன் குடும்பத்துடன் காடுகள் நிறைந்திருக்கும் மலைப்பாங்கான கொல்லிமலைக்கு இன்ப சுற்றுலா செல்லும்போது விபத்துக்குள்ளாகி தன் பெற்றோரிடமிருந்து பிரிந்து காடுகளில் அலைந்து திரிந்து பல்வேறு இடர்பாடுகளுக்கு மத்தியில் எவ்வாறு தன் பெற்றோருடன் ஒன்று சேருகிறார் என்ற திரைப்பட கதைச் சுருக்கத்தை கூறி படம் மூலமாக விளக்கப்படும் நீதி கருத்துக்களை சிறப்பாக பட்டியலிட்டனர். படம் குறித்த வினாக்கள் கேட்க மாணவ மாணவிகள் ஆர்வத்துடன் பதில் கூறினர். கணினி பயிற்றுநர் வித்யா நன்றி கூறினார்.



# பழனி பாலன் நண்பர்கள் குழு சார்பில் பங்குனி உத்திர திருவிழாவை முன்னிட்டு 5000 பேருக்கு அன்னதானம்

திண்டுக்கல், எப்.3-

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் உலக புகழ்பெற்ற பங்குனி உத்திர திருவிழா விமர்சையாக நடைபெற்று வருகிறது இதனை முன்னிட்டு பழனி பாலன் நண்பர்கள் குழு சார்பாக பழனி கிரிவிதி பாதைகள் பிரம்மாண்டமான நிகழ்வு நடைபெற்றது இதில் 5000 க்கு அதிகமான பாதையாத்திரை பக்தர்கள் மூன்று வகையாக சுவையான சாதங்களுடன் அன்னதானம் வழங்கப்பட்டது

இந்நிகழ்வில் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் நேரில் கலந்து கொண்டு பக்தர்களுக்கு உணவு பரிமாறினார் மேலும் இக்குழுவில் பழனி மற்றும் சுற்றுவட்டார பகுதியில் பல்வேறு நலத்திட்டங்களை செய்து வருகின்றன ஏழை மாணவர்களுக்கு கல்வி உதவிகள் நலிந்த பிரிவினருக்கு தேவையான மருத்துவ உதவிகள் இயற்கை பேரிடர் காலங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான நிவாரண பணிகள் செய்து வருகின்றனர் பக்தர்களின் பசியாற்றிய சமூக சேவையிலும் தடம் பதித்து வரும் பழனி பாலன் நண்பர்கள் குழுவின் இந்த செயல் அப்பகுதி மக்களிடையே பெரும் நிகழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது



■ 2026 சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டுபர்கூரில் புதிய தொகுதிப்பார்வையாளரான பார். இளங்கோவனுக்கு திமுக வேட்பாளர் மதியழகன் தலைமையில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. மாவட்ட அவை தலைவர் நாகராஜ், பொருளாளர் கதிரவன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.தேர்தலில் கூட்டணிக்கு மாபெரும் வெற்றி பெற ஒருங்கிணைந்து செயல்பட உறுதி எடுத்துக் கொள்ளப்பட்டது.



# மீன் பதப்படுத்துதல் நிலையம்

ராமநாதபுரம், ஏப்.3-

திமுக மீண்டும் ஆட்சி அமைத்ததும் ராமேஸ்வரம், திருப்புல்லாணி, உத்திரகோசமங்கை உள்ளிட்ட கோயில்களை ஒருங்கிணைந்த சுற்றுலாத் தலங்களாக மாற்றவுள்ளோம்மீனவர்களின் நீண்ட நாள் கோரிக்கையான மீன் பதப்படுத்துதல் நிலையம் அமைக்கப்படும்

ராமநாதபுரம் சட்டமன்ற வேட்பாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் வாக்குறுதி




## கெங்குவார்பட்டி வளர்க்குழந்தைகள் அறக்கட்டளை

# குழந்தைகளின் பாதுகாப்பிற்காக சுற்றுச்சுவர் கட்டுவதற்கு தனியார் நிறுவனம் நிதியுதவி

பெரியகுளம் ஏப்.03-

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே கெங்குவார்பட்டியில் வளர்க்குழந்தைகள் அறக்கட்டளை குழந்தைகள் காப்பகம் உள்ளது. இந்த வளர்க்குழந்தைகள் இல்லமானது தேனி, திண்டுக்கல் மற்றும் மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது. இந்நிலையில்

ஆப்டஸ் வேல்யூ ஹவுசிங் ஃபைனான்ஸ் இந்தியா லிமிடெட் நிதி உதவியில் மகளிர் ஆதரவற்றோர், மற்றும் மாற்றுத்திறனாளிகளின் பாதுகாப்பிற்காக ரூ 59 லட்சம் நிதியுதவியில் சுற்று சுவர் கட்டிடம் கட்டப்பட்டது. இதனால் ஆதரவற்றோர் மகளிர், மாற்றுத்திறனாளிகள் மையத்திற்குப் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் அத்தியாவசிய தளவாடங்களை உறுதி செய்வதற்காக, பாதுகாப்பு சுற்றுச்சுவர், சுகாதார வசதிகளை அமைப்பதுடன், அவசரகால மின்வாகனமும் உறுதி செய்யப்பட்டது. இந்தத் திட்டத்தை ஆப்டஸ் வேல்யூ ஹவுசிங் ஃபைனான்ஸ் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் செயல் தலைவர் எம். ஆனந்தன் தொடங்கி வைத்தார். மேலும், சிஎஸ்ஆர் பிரிவின் சிரத்தை மேலாளர் தயாநிதி பாராட்டி பேசினார் இந்த நிதியுதவி மூலம் தேனி திண்டுக்கல் மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களில் பயிலும் வளர்க்குழந்தைகள் அறக்கட்டளை காப்பகத்தில் பயிலும் மாணவர்கள் சுமார் 500க்கும் மேற்பட்டோர் பயனடைவார்கள் என தெரிவித்தனர் . இந்நிகழ்வில் வளர்க்குழந்தைகள் அறக்கட்டளை நிர்வாகிகள், பணியாளர்கள் மற்றும் குழந்தைகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



# பல்லாவரம் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளருக்கு பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது

பல்லாவரம் ஏப். 03-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் ஜமீன் ராயப்பேட்டை பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் மாநில பொதுக்குழு உறுப்பினர் எம்.ரேணு கிருஷ்ணன், மாவட்ட இளைஞரணி செயலாளர் ரேணு கண்ணன் ஏற்பாட்டில் பல்லாவரம் வேட்பாளர் வெங்கடேசன் அவர்களுக்கு மாலை அணிவித்து உற்சாக வரவேற்பு அளித்தனர்

பல்லாவரம் சட்டமன்ற தொகுதி ஐஜேகே வேட்பாளர் வெங்கடேசன் பல்லாவரம் சட்டமன்ற தொகுதி அனைத்து இடங்களிலும் இரட்டை இலை சின்னத்தில் வாக்கு சேகரிக்கும் ஈடுபட்டனர் அதன்படி பல்லாவரம் ஜமீன் ராயப்பேட்டை பகுதியில் மாநில பொதுக்குழு உறுப்பினர் எம்.ரேணு கிருஷ்ணன், மாவட்ட இளைஞரணி செயலாளர் ரேணு கண்ணன் ஏற்பாட்டில் மாலை அணிவித்து உற்சாக வரவேற்பு அளித்தனர்

அதனைத் தொடர்ந்து அஸ்தினாபுரம் பகுதி மற்றும் முத்துமாரியம்மன் கோவில் சிறப்பு வழிபாடு நடைபெற்றது

இதில் பாட்டாளி மக்கள் கட்சி மாவட்ட செயலாளர் வெங்கடேசன், பசுமைத்தாயகம் மாநிலச் செயலாளர் ஐ.நா.கண்ணன், முன்னாள் கவுன்சிலர்கள் க.குமார், ஜெ.எம்.சேகர், மாவட்ட பொருளாளர் வளர்மதி குப்பன், மாவட்ட துணைச் செயலாளர் பூக்கடை க.முனுசாமி, மாவட்ட இளைஞர் சங்கத் தலைவர் வழக்கறிஞர் பாலாஜி, மற்றும் பிராமணர் வேட்பாளரை சந்தித்து சால்வை அணிவித்து வாழ்த்துக்கள் தெரிவித்துக் கொண்டனர்





■ கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் வட்டம், ஓரப்பம் ஊராட்சி, கோடிபுதூர் கிராமத்தை சேர்ந்த இராணுவ வீரர் விக்னேஷ் (வயது 31), ஸ்ரீநகர் ஜம்மு மாநிலத்தில் இராணுவ 22 வது என்ஜீனீரிங் ரெஜிமின்ட் பிரிவில் பணிபுரிந்து, பணியின் போது 30.03.2026 அன்று வீர மரணமடைந்ததையடுத்து மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தங்கதுரை ஆகியோர் இன்று (02.04.2026) மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி மனைவி மற்றும் தாயாருக்கு ஆறுதல் கூறினார்கள். உடன் பர்கூர் வட்டாட்சியர் சின்னசாமி உள்ளிட்ட பலர் உள்ளனர்.



## தாராபுரம் பத்திரிக்கையாளர் நல சங்க மற்றும் தாராபுரம் தொலைக்காட்சி மற்றும் நாளிதழ் செய்தியாளர்களை அஇஅதிமுக வேட்பாளர் சத்தியபாமா நேரில் சந்தித்து வாழ்த்து

திருப்பூர், ஏப்.3-

திருப்பூர் மாவட்டம், தாராபுரத்தில் பத்திரிக்கையாளர் நலச் சங்க உறுப்பினர்கள், தொலைக்காட்சி மற்றும் நாளிதழ் செய்தியாளர்களை அஇஅதிமுக தாராபுரம் (தனி) தொகுதி வேட்பாளர் திருமதி சத்தியபாமா அவர்கள் நேரில் சந்தித்தார். இந்த சந்திப்பின் போது, செய்தியாளர்கள் அனைவரும் அவருக்கு வாழ்த்துகளை தெரிவித்தனர். தொடர்ந்து நடைபெற்ற கலந்துரையாடலில், தாராபுரம் சட்டமன்ற தொகுதியின் தற்போதைய கள நிலவரங்கள், பொதுமக்களின் தேவைகள் மற்றும் உள்ளூர் பிரச்சினைகள் குறித்து செய்தியாளர்களிடம் கேட்டறிந்து கொண்டார்.

மேலும், மக்கள் நலன் மற்றும் வளர்ச்சியை முன்னிலைப்படுத்தி செயல்பட உறுதியுடன் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## கிருஷ்ணகிரியில் ஜமாத் பெரியோர்களை சந்தித்து மதசார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கு ஆதரவு கோரிக்கை

கிருஷ்ணகிரி, ஏப்.03-

கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் உள்ள ஜமாத் பெரியோர்களை மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி நிர்வாகிகள் நேரில் சந்தித்து, வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தலில் கூட்டணிக்கு ஆதரவு தருமாறு கேட்டுக்கொண்டனர்.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், பர்கூர் சட்டமன்றத் தொகுதி வெற்றி வேட்பாளருமான தே. மதியழகன் வழிகாட்டுதலின்படி, கிருஷ்ணகிரி மேற்கு நகர கழக செயலாளர் என். அஸ்லம் மற்றும் கிழக்கு நகர கழக செயலாளர் எம். வேலுமணி தலைமையில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

இச்சந்திப்பில் மனிதநேய மக்கள் கட்சி மாவட்ட தலைவர் நூர் முகமது, எஸ்டிபிஐ கட்சி மாவட்ட தலைவர் அஸ்கர் அலி உள்ளிட்ட கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்து கொண்டு, ஜமாத் நிர்வாகிகளுடன் கலந்துரையாடினர். மேலும் நகர மன்ற உறுப்பினர்கள் சுகுமார், மதன்ராஜ், ஜெயக்குமார், பிரோஸ் கான், சந்தோஷ், மதீன், முகமது அலி, மாவட்ட சிறுபான்மை பிரிவு நிர்வாகி ரியாஸ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

சந்திப்பின் போது, கூட்டணி அரசின் மக்கள் நலத் திட்டங்கள், சிறுபான்மை மக்களுக்கு வழங்கப்பட்ட பல்வேறு நலன்கள் மற்றும் எதிர்கால திட்டங்கள் குறித்து விளக்கி கூறப்பட்டது. தொடர்ந்து, மதச்சார்பற்ற அரசை வலுப்படுத்தவும், முன்னேற்ற பாதையில் மாநிலத்தை கொண்டு செல்லவும், இந்த தேர்தலில் காங்கிரஸ் கட்சி வேட்பாளருக்கு முழு ஆதரவு வழங்குமாறு ஜமாத் பெரியோர்களிடம் அவர்கள் வலியுறுத்தினர்.

இந்த சந்திப்பு மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றதுடன், கூட்டணிக்கு ஆதரவு அதிகரிக்கும் என நிர்வாகிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.



■ தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல்2026 நடைபெறுவதை முன்னிட்டு மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் 100% வாக்கு பதிவினை வலியுறுத்தி வண்ணக்குடைகளால் அலங்காரம் செய்து தேர்தலின் மகத்துவத்தை வண்ணக் கோலங்கள் வரைந்து, ஒயிலாட்டம் ஆடி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப.,தலைமையில் பொதுமக்கள் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட அனைவரும் வாக்காளர் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.



■ செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் சட்டமன்றத் தொகுதி அதிமுகவின் வெற்றி வேட்பாளர் சிட்லப்பாக்கம் ச.ராசேந்திரன் அவர்களை ஆதரித்து சிட்லபாக்கம் செம்பாக்கம் பகுதி 39வது வடக்கு வட்டக் கழகத்தில் வீடு வீடாக சென்று துண்டு பிரசுரங்கள் கொடுத்து இரட்டை இலைக்கு சிட்லபாக்கம் செம்பாக்கம் பகுதி இணைச் செயலாளர் எஸ்.ராஜாத்தி, 39வது வார்டு பொறுப்பாளர் செங்கல்பட்டு மாவட்ட எம்ஜிஆர் இளைஞர் அணி இணைச் செயலாளர் விஜயநாராயணன்,செங்கல்பட்டு மேற்கு மாவட்ட இலக்கிய அணி இணைச் செயலாளர் இ.எம்.டேனியல், 39வது வடக்கு வட்டக் கழக செயலாளர் பா.வேதகிரி, 22வது வார்டு வட்ட செயலாளர் கராத்தே ஶ்ரீதர், 36வது வார்டு வட்டச் செயலாளர் ஐ.லோகு, வட்டவைத் தலைவர் பாஸ்கர்,பாஜக நிர்வாகி சங்கையா,அமமுக நிர்வாகி கண்ணன்,பகுதி இளைஞரணி துணைச் செயலாளர் சீனிவாசன், நியூ காலனி பெருமாள்,துரை, ஹரிஷ் உள்ளிட்டோர் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்





■ கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில்,கிழக்கு மாவட்ட செயலாளர், பர்கூர் தொகுதி வேட்பாளர் மதியழகன், மூத்த கழக நிர்வாகிகளை சந்தித்து வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்2026 தேர்தலை முன்னிட்டு மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் தீவிர பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.கூட்டணி கட்சிகளின் ஒத்துழைப்பும், மக்களின் பேராதரவும் உறுதியாக உள்ளதாக அவர் தெரிவித்தார். நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மணிமேகலை நாகராஜ், மாவட்ட அவைதலைவர் நாகராஜ், கிழக்கு ஒன்றிய செயலாளர் மகேந்திரன், மாவட்ட பொருளாளர் கதிரவன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.



## வேப்பனப்பள்ளி சட்டமன்ற தொகுதி மாற்று கட்சியினர் கேபி முனுசாமி முன்னிலையில் அதிமுகவில் இணைந்தனர்

கிருஷ்ணகிரி,ஏப்.03-

கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனப்பள்ளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தொட்ட மெட்டரை ஊராட்சியில் அதிமுகவில் திரளானோர் இணையும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியை மெட்டரை ஊராட்சி, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் அப்பையா ஏற்பாடு செய்திருந்தார்.

நிகழ்ச்சியில் 20க்கும் மேற்பட்டோர், கே பி. முனுசாமி முன்னிலையில் தங்களை அதிமுகவில் இணைத்துக் கொண்டனர். அவர்களை கட்சியின் சார்பில் வரவேற்று, வரும் சட்டமன்றத் தேர்தலில் கட்சியை வலுப்படுத்த அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று முனுசாமி வலியுறுத்தினார்.

மேலும், இந்த இணைவு மூலம் வேப்பனப்பள்ளி தொகுதியில் அதிமுகவின் அமைப்பு வலிமை அதிகரிக்கும் என நிர்வாகிகள் தெரிவித்தனர். பொதுமக்கள் மற்றும் புதிய உறுப்பினர்கள் மத்தியில் உற்சாகம் காணப்பட்டது.

நிகழ்ச்சியில் மேற்கு மாவட்ட இளைஞர் மற்றும் பெண்கள் பாசறை மாவட்ட செயலாளர் ராமு, அதிமுக நிர்வாகிகள் ராஜகோபால், சுப்பிரமணி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு வாழ்த்துகள் தெரிவித்தனர்.



■ தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல்2026 நடைபெறுவதை முன்னிட்டு, கிருஷ்ணகிரி மாவட்டம், அரசு மருத்துவக்கல்லூரி கூட்டரங்கில், வாக்காளர்கள் தேர்தலில் 100 சதவிகிதம் வாக்களிப்பதன் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்திய அரசு மருத்துவக்கல்லூரி மாணவர்களுக்கு மற்றும் சிலம்பாட்டம் நிகழ்ச்சியில் கலந்துக்கொண்ட மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் வழங்கினார். உடன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.கவிதா, அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.சத்யபாமா, துணை முதல்வர் மரு.சாத்விகா கண்காணிப்பாளர் மரு.சந்திசேகர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சிவபிரகாசம்,குமரேசன், சாவித்ரி, தேர்தல் விழிப்புணர்வு ஒருங்கிணைப்பாளர் புவனேஸ்வரி உள்ளிட்ட பலர் உள்ளனர்.



■ திண்டுக்கல் மாவட்டம். பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் பங்குனி உத்திரத்திருவிழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன், பங்குனி உத்திரத் திருத்தேரினை வடம் பிடித்து தேரோட்டத்தை தொடங்கி வைத்தார். அருகில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிரதீப்., பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் இணை ஆணையர் செ.மாரிமுத்து உட்பட பலர் உள்ளனர்.



■ கிருஷ்ணகிரி (53)சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட SST குழு, காவேரிப்பட்டினம் போத்தாபுரம் கூட்ரோடு அருகே வாகனத் தணிக்கையில் ஈடுபட்டது.அப்போது TN 24 BC 6474 என்ற காரில் பயணம் செய்த இடைபையூர் கிராமத்தைச் சேர்ந்த சபரி என்பவரிடம் இருந்து ஆவணமின்றி ரூ.1,35,800 பணம் கண்டுபிடிக்கப்பட்டது.உடனடியாக அந்த தொகை பறிமுதல் செய்யப்பட்டதுபின்னர்,உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் வட்டாட்சியர் கிருஷ்ணகிரி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டது.

## மதுரையில்'விஷன் 2030' ரோட்டரி மாநாடு

## உலகத் தலைவர்கள் பங்கேற்பு!

மதுரை, ஏப். 3-

"விஷன் 2030" திட்டத்தின் கீழ் மண்டல உறுப்பினர்கள் மாநாடு மதுரையில் உள்ள வேலம்மாள் ஐடா ஸ்கட்டர் வளாகத்தில் நடைபெறுகிறது. இந்த மாநாட்டில் சிறப்பு விருந்தினராக சர்வதேச ரோட்டரியின் 2026ஐ 27 தலைவர் யிங்கா பாபலோலா பங்கேற்கிறார்.

திருச்சியை சேர்ந்த முருகானந்தம், 2026ஐ 27 ஆண்டிற்கான ரோட்டரி துணைத் தலைவராக புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிலையில், அவரது தலைமையில் இந்த மாநாடு நடைபெறுகிறது. மேலும், சர்வதேச ரோட்டரியின் 17 பேர் கொண்ட நிர்வாக இயக்குனர்களில் ஒருவராக இருக்கும்




அவர், இந்த உயரிய பொறுப்பை வகிக்கும் முதல் தமிழரும் இளம் வயது தலைவருமானது குறிப்பிடத்தக்கது.

1905ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட ரோட்டரி இன்டர்நேஷனல், உலகம் முழுவதும் 220 நாடுகளில் 1.2 மில்லியன் உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகிறது. கல்வி, சுகாதாரம், பொருளாதாரம், சுற்றுச்சூழல் உள்ளிட்ட 7 முக்கிய துறைகளில் சமூக சேவைகளை முன்னெடுத்து வருகிறது. குறிப்பாக, 1979 முதல் உலகளாவிய போலியோ ஒழிப்பு முயற்சியில் 99.9% வெற்றியை பதிவு செய்துள்ளது.

இந்த மாநாட்டை தென் தமிழகத்தை சேர்ந்த 6 மண்டலங்கள் (2981, 2982, 3000, 3203, 3206, 3212) இணைந்து நடத்துகின்றன. 2030ஆம் ஆண்டு ரோட்டரியின் 125வது ஆண்டு விழாவை முன்னிட்டு, உறுப்பினர்கள் எண்ணிக்கையை 1.25 மில்லியனாகவும், ரோட்டராக்டர்கள் எண்ணிக்கையை 1.25 லட்சமாகவும் உயர்த்தும் இலக்குடன் செயல்பட்டு வருகின்றனர்.மண்டல ஒருங்கிணைப்பாளர் ஸிமீஸீ குமணன் தலைமையிலும், துணை ஒருங்கிணைப்பாளர் ஸிமீஸீ ஆனந்த ஜோதி மற்றும் ஏற்பாட்டுக் குழுவினரின் முயற்சியாலும் மாநாடு பிரம்மாண்டமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இம்மாநாட்டில் பள்ளி, கல்லூரி மாணவர்கள், ரோட்டரியர்கள், இந்தியாவின் மூத்த மற்றும் தற்போதைய தலைவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொள்ள உள்ளனர். மேலும், முதன்முறையாக மதுரை வருகை தரும் உலகத் தலைவர் இன்கா மற்றும் துணைத் தலைவர் முருகானந்தம் சென்னையில் நடந்த உறுப்பினர் மண்டல மாநாட்டில் சேவை திட்டங்களின் துவக்க விழாக்களில் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161